**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII code of Criminal Procedure)
**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, GANDARVAKOTTAI**
**CC.NO-1/2024**

**List of Witness LW8 Examined as PW6 (IO)**

| | | | |
|---|---|---|---|
| Name | கனகராஜ் | Age: | 61 |
| Father name | சுந்தரம் | Calling: | உதவி ஆய்வாளர் ஓய்வு |
| Village | பசுபதி கோவில், தஞ்சாவூர் | Taluk | தஞ்சாவூர் |

Solemly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 18.11.2025
( எதிரி ஆஜரில்லை. அவரது சார்பில் பிரிவு சார்பில் பிரிவு 355 BNSS- ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதி அளிக்கப்பட்டது)

**முதல் விசாரணை**

1) நான் தமிழ்நாடு காவல் துறையில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து ஓய்வு பெற்று தற்போது தஞ்சாவூரில் வசித்து வருகிறேன். நான் கடந்த 30.04.2019 ஆம் தேதி புதுக்கோட்டை மாவட்டம், ஆதனக்கோட்டை காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக நிலைய பொறுப்பில் இருந்த போது, முல்லை நகர் கருப்பையா மகன் உருமையா என்பவர் நிலையம் ஆஜராகி ஆஜராகி, கொடுத்த புகார்மனுவை பெற்று, நிலைய குற்ற எண் 33/2019 இல் சட்டப்பிரிவுகள் 457, 380 IPC -ன் கீழ் வழக்கு பதிவு செய்து, கணினி முதல் தகவல் அறிக்கை தயார் செய்தேன். **(மேற்படி முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

2) நான் வழக்கினை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு, 30.04.2019 ஆம் தேதி, , மாலை 05.45 மணியளவில் சம்பவ இடம் சென்று, சாட்சிகள் சின்னையா மற்றும் சரவணன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு, மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்து, சாட்சிகளை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். **(மேற்படி மாதிரி வரைபடம் அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

3) பின்னர் பட்டியல் சாட்சிகள் உருமையா, ராணி, காலாராணி ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். சாட்சிகளை விசாரித்து வழக்கின் சம்பவம் உண்மை என்று தெரிய வந்ததால், வழக்கின் எதிரிகளை தேடி வந்த நிலையில், 11.05.2019 ஆம் தேதி, திருவெறும்பூர் காவல் நிலைய குற்ற எண் 173/2019 வழக்கில் சம்மந்தப்பட்ட எதிரிகளை திரும்வெறும்பூர் காவல் நிலைய உதவி ஆய்வாளர் தேடி வந்த நிலையில், அன்றைய தினம் குமரேசபுரம் இரயில்வே கேட் அருகில், அதிகாலை 04.30 மணியளவில், ரோந்து பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போது, அங்கு வழியாக வந்த

சிவப்பு நிற டவேரா காரினை மறித்து நிறுத்திய போது, அதிலிருந்த நபர்கள் ஓட முற்பட்டதால் அவர்களை போலிஸ் பார்ட்டி சகிதம் பிடித்து, விசாரித்த போது, அந்த நபர்கள் கார்த்திக் என்ற செல்வகார்த்தி, தமிழ்செல்வன், ஆனந்தன் என தெரிய வந்ததாகவும், அந்த நபர்களை தொடர்ந்த விசாரித்ததில், 1 ஆம் எதிரி கார்த்திக் அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் செல்வகணேஷ் மற்றும் தியாகராஜன் ஆகியோர் முன்னிலையில் பதிவு செய்துள்ளார். மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தில் " தாங்கள் எங்களை அழைத்து சென்றால் ------ இடங்களையும் ----- பொருட்களையும் எடுத்து அடையாளம்காட்டி தங்களிடம் ஆஜர் செய்கிறேன்" என்று சொன்னதன்பேரில், 1 ஆம் எதிரியை 11.05.2019 ஆம் தேதி காலை 09.30 மணியளவில், LIC பிரிவு ரோடு அருகில் உள்ள, V.V கார் வொர்க் ஷாப்பிற்கு அழைத்து சென்று, அங்கு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த காரில் இருந்து, 1 ஆம் எதிரி எடுத்து அடையாளம் காட்டி ஆஜர் செய்த, இவ்வழக்கில் சம்மந்தப்பட்ட மொத்தம் 416 கிராம் எடையுள்ள வெள்ளிச்செயின் 14, சுமார் 100 கிராம் எடையுள்ள வெள்ளி மோதிரம் 22, சுமார் 303 கிராம் எடையுள்ள வெள்ளிக் கைசெயின் 13 ஆகியவற்றை ஒரு கைப்பற்றுதல் மகஜர் மூலமாக சாட்சிகள் செல்வகணேஷ் மற்றும் தியாகராஜன் முன்னிலையில், கைப்பற்றியுள்ளார். **( மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது) (ஒப்புதல் வாக்குமூலத்தில் எந்த இடத்தில், எதனை மறைத்து வைத்திருப்பதாக சொல்லப்படவில்லை என்பதால் சாட்சிய சட்டம் பிரிவு 27-ன் கீழ் சட்டவலிமை கொண்டதல்ல என்று எதிரிகள் தரப்பில் ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டு, ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது)**

4) மேற்படி கைப்பற்றப்பட்ட வெள்ளிப்பொருட்கள் இவ்வழக்குடன் தொடர்புடைய வழக்கு சொத்துக்கள் என்பதாலும் மேற்படி 3 எதிரிகள் இவ்வழக்கில், சம்மந்தப்பட்டுள்ளதாக தெரிய வந்துள்ளதாக திருவெறும்பூர் காவல் நிலைய ஆய்வாளரால் தகவல் சொன்னதன் அடிப்படையில், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்திலிருந்து எங்களுக்கு தகவல் சொன்னார்கள். அதன் அடிப்படையில், திருவெறும்பூர் காவல் நிலைய உதவி ஆய்வாளர் மேற்படி ஒப்புதல்வாக்குமூலத்தின் உண்மை நகல், கைப்பற்றுதல் மகஜர் மற்றும் வழக்கு சொத்துக்களை எங்களிடம் ஒப்படைத்து மேற்படி 3 எதிரிகள் நீதிமன்றக் காவலில் இருந்து வருவதாக தெரிவித்தார்.

5) அதன் அடிப்படையில், 17.05.2019 ஆம் தேதி, எதிரிகள் கார்த்திக் என்ற செல்வக்கார்த்திக், தமிழ்செல்வன், ஆனந்தன் ஆகியோர்களை திருச்சி மத்திய சிறைச்சாலையில் வைத்து, சம்பிரதாய கைது செய்து, PT வாரண்ட் மூலமாக நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி, நீதிமன்றக்காவலுக்கு அனுப்பி வைத்தேன். கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்துக்களை படிவம் 91 மூலமாக நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். (**மேற்படி படிவம் 91 அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது**)

6) பின்னர் 11.05.2019 ஆம் தேதி, ஒப்புதல் வாக்குமூல சாட்சிகள் செல்வகணேஷ் மற்றும் தியாகராஜன் ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து, வாக்குமூலம் பதிவு செய்தேன். 17.05.2019 ஆம் தேதி, சாட்சி உருமையா என்பவரை விசாரித்து, மறுவாக்குமூலம் பதிவு செய்தேன். இத்துடன் இந்த விசாரணையை முடித்து வழக்கின் கோப்பினை பார்வையிட்டு எதிரிகளுக்கு எதிராக 17.05.2019 ஆம் தேதி, சட்டப்பிரிவு 457, 380 IPC இதச-ன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தயார் செய்து தாக்கல் செய்தேன்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :</u>

1) திருவெறும்பூர் காவல் நிலையத்திலிருந்து தகவல் கிடைத்து, நான் எந்த தேதியில் திருவெறும்பூர் காவல் நிலையம் சென்றேன் என்றால் 11.05.2019 ஆம் தேதி சென்றேன். நான் திருவெறும்பூர் காவல் நிலையத்திற்கு சென்றிருந்த போது, எதிரியின் மீது ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து வைக்கப்பட்டிருந்தது என்றால் சரிதான். படிவம் 91 மூலமாக வழக்கு சொத்துக்களை நான் பெற்றுக்கொண்டேன் என்றால் சரிதான். எந்த தேதியில் வழக்கு சொத்துக்களை பெற்றேன் என்றால் ஞாபகம் இல்லை. வழக்கு கோப்பினை பார்த்து சொல்லமுடியுமா என்றால் வழக்கு கோப்பில் அதற்கான குறிப்புகள் இல்லை. 17.05.2019 ஆம் தேதி, குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டதாக உள்ள நிலையில், இவ்வழக்கில் சொல்லப்பட்டுள்ள கைப்பற்றுதல் மகஜர் 27.05.2019 தேதியிலும், படிவம் 91 29.05.2019 ஆம் தேதியிலும் நீதிமன்றத்தில் பெறப்பட்டது என்றால் சரிதான்.

2) பொதுவாக ஒரு காவல் நிலையத்தில் பதிவு செய்யப்பட்ட, வழக்குகள் பற்றிய முழு விபரமும் அருகில் இருக்கும் காவல் நிலையத்திற்கு கூட தெரிய வர வாய்ப்பு இல்லை என்றால் சரிதான். எனக்கு தகவல் கிடைத்து சென்றதாக சொல்லப்படும் காவல் நிலையம் திருச்சி மாவட்டத்திற்குள்ளது என்றால் சரிதான். அ.சா.ஆ.5 கைப்பற்றுதல் மகஜரில், கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் வழக்குச் சொத்தின் எண்ணிக்கை மற்றும் அளவுகளில் அடித்தல், திருத்தல் உள்ளது என்றால் சரிதான். அது தொடர்பாக பக்கத்தில், சுருக்கொப்பம் எதுவும் செய்யப்படவில்லை என்றால் சரிதான். திருச்சி மாவட்டம் திருவெறும்பூர் காவல் நிலைய

ஆய்வாளரால் கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் நிலையில், அவரை இந்த வழக்கில் நான் சாட்சியாக விசாரிக்கவில்லை என்றால் சரிதான்.

3) வழக்கின், புகார் மற்றும் எனது விசாரணையின்படி, களவு போனதாக சொல்லப்படும் பொருள்களின் விபரம் வெள்ளிக்கழுத்து செயின் 8, வெள்ளி மோதிரம் 2, வெள்ளிக் கைச்செயின் 12 இருக்கிறதா என்றால் புகார் மனுவில், வெள்ளிக்கழுத்து செயின் 8, வெள்ளி மோதிரம் 2, வெள்ளிக் கைச்செயின் 12 உள்ளது. எனது விசாரணையில், அ.சா.1 மறுவாக்குமூலத்தில் வெள்ளிக்கழுத்து செயின் 14, வெள்ளி மோதிரம் 22, வெள்ளிக் கைச்செயின் 13 ஆகியவற்றை அடையாளம் காட்டியதாக வாக்குமூலம் அளித்தார். மறுவாக்குமூலத்தில் சொல்லியுள்ள கூடுதல் பொருள்கள் களவு போனதாக எனது விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. மேற்படி கூடுதலான பொருட்களை புகார் மனுவில் சொல்லாததற்கான காரணம் ஏதும் மறு வாக்குமூலத்தில் சொன்னாரா என்றால் இல்லை.

4) அந்த மறுவாக்குமூலம் பதிவு செய்யப்பட்டதாக சொன்னது 17.05.2019 என்றால் சரிதான். அந்த மறுவாக்குமூலம் 31.05.2019 ஆம் தேதி நீதிமன்றத்தில் பெறப்பட்டது என்றால் சரிதான். அ.சா.ஆ.5 கைப்பற்றுதல் மகஜர் நீதிமன்றத்திற்கு அனுப்பிவைக்கப்பட்ட பிறகு, மறுவாக்குமூலம் தயார் செய்து, 31.05.2019 ஆம் தேதி, நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல. அ.சா.ஆ.5 கைப்பற்றுதல் மகஜரில் எங்கள் காவல் நிலைய குற்ற எண் மற்றும் சட்டப்பிரிவுகளை குறிப்பிட்டு, திருவெறும்பூர் காவல் ஆய்வாளரால் தயார் செய்யப்பட்டது என்றால் சரிதான். ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகஜர் கணினி மூலம் தட்டச்சு செய்யப்பட்ட ஆவணங்கள் என்றால் சரிதான். எங்கு வைத்து யாரால் தட்டச்சு செய்யப்பட்டது என்பதை நான் விசாரித்து, அவரை வழக்கில் சாட்சியாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். அ.சா.ஆ.2 பார்வை மகஜரில், இட அமைப்பில், களவு போனது தொடர்பான அமைப்புகள் எதுவும் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். களவு போனதாக சொல்லப்படும் இடத்தின் உட்புற அமைப்புகள் தொடர்பான விபரங்களும் மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜரில் இல்லை என்றால் சரிதான்.

5) இந்த வழக்கின் எதிரிகளிடம் நான் எந்தவொரு வாக்குமூலமும் பெறவில்லை என்றால் சரிதான். வாக்குமூலத்தின் அடிப்படையில், என்னால் எந்த வழக்கு சொத்தும் கைப்பற்றப்படாத நிலையில், இவ்வழக்கில் கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் வழக்கு சொத்திற்கு சட்ட வலிமை ஏதும் இல்லை என்றால் சரியல்ல. என்னால் பெறப்பட்டதாக சொல்லப்படும் புகார் மற்றும் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை 7 நாட்கள் காலதாமதமாக நீதிமன்றத்தில் பெறப்பட்டுள்ளது என்றால் சரிதான். காலதாமதத்திற்கு சிறப்பு காரணம் உள்ளதா என்றால் இல்லை. சாட்சிகளின் வாக்குமூலம் 31.05.2019 ஆம் தேதி தான்

நீதிமன்றத்தில் பெறப்பட்டது என்றால் சரிதான். அதற்கு சிறப்பு காரணம் எதுவும் உள்ளதா என்றால் வழக்கு சொத்துக்களை ஒப்படைத்து விட்டு, வாக்குமூலங்கள் நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. நான் சொன்ன நாள், நேரத்தில், இடத்தில் வழக்கு சொத்தினை பெற்றதாகவும், அதனை இந்த வழக்கின் தடயச்சொத்துக்கள் என்று சொல்வதும் தவறு என்றாலும், கண்டுபிடிக்க முடியாத வழக்கை முடிவுக்கு கொண்டுவருவதற்காக வழக்கின் எதிரியை தொடர்புபடுத்தி, தவறான குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. நான் சம்பவ இடம் செல்லவில்லை என்றாலும் சாட்சிகள் யாரையும் விசாரணை செய்யவில்லை என்றாலும் சரியல்ல.

**சாட்சியின் கையொப்பம்**

**திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல, தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு, அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு, என் கையெழுத்து செய்யப்படுகிறது.**

**ஒப்பம்.என்.சிவபழனி,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**கந்தர்வகோட்டை.**